பக்கங்கள்: 08

காலைக்கதிர்

Kālaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஆனி 31 வியாழக்கிழமை 15.07.2021 கதிர் 118

## மின்சாரம் தாக்கி சிறுவன் மரணம்

மட்டக்களப்பு மாவட்டம், சின்ன ஊறணிப் பகுதியில் மின்சாரம் தாக்கி 6 வயது சிறுவன் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளான்.

சின்னஊறணி 3 ஆம் குறுக்கு வீதியைச் சேர்ந்த தரம் 2 இல் கல்வி கற்கும் 6 வயதுடைய விநாயகம் விதுஷன் என்ற சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

☞2

## பருத்தித்துறை பொதுச்சந்தையில் 5 பேருக்குக் கொரோனாத் தொற்று

### சந்தையை மூடுவது தொடர்பில் ஆராய்வு

**(பருத்தித்துறை நிருபர்)**

பருத்தித்துறை பொதுச் சந்தை மற்றும் அதனை அண்டிய சந்தை மேற்கு பகுதியில் கொரோனாத் தொற்று இருக்கலாம் எனும் சந்தேகத்துக்கிடமானோரிடம் இன்று முன்னெடுக்கப்பட்ட அதிவிரைவு அன்டிஜன் பரிசோதனையில் ஐவருக்குத் தொற்றுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அவர்களில் மூவர் சந்தை வியாபாரிகள் என்றும், இருவர் சந்தை மேற்குப் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர் .

அதனால் பருத்தித்துறை

☞2

## பருத்தித்துறையில் தேர்த் திருவிழாவில் பங்கேற்ற கொரோனாத் தொற்றாளர்கள்

### இன்று தீர்த்தத் திருவிழாவில் பக்தர்களுக்குத் தடை

**(பருத்தித்துறை நிருபர்)**

யாழ். வடமராட்சி, பருத்தித்துறை சிவன் கோயில் தேர்த் திருவிழாவில் கொரோனா வைரஸ் தொற்றாளர்களும் பங்கேற்றமை உறுதி செய்யப்பட்டுள்ளதை அடுத்து இன்று தீர்த்த திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டது.


இது குறித்து தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

பருத்தித்துறை நகரில் அமைந்துள்ள சிவன் கோயில் வருடாந்தத் திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

☞2

# யாழ்., கிளிநொச்சிக்கும் பரவியது ஆபத்தான ‘டெல்டா’ திரிவு வைரஸ்

### உறுதிப்படுத்தியது சுகாதார அமைச்சு



உலக அளவில் அதிக ஆபத்து வாய்ந்தது என்று கருதப்படும் இந்தியாவின் திரிவு வைரஸான ’டெல்டா’ யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களுக்கும் பரவியுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த தகவலை சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஹேமந்த ஹேரத் வெளியிட்டுள்ளார்.

☞2

### சம்பந்தனின் கொழும்பு இல்லத்தில்

## கூட்டமைப்புடன் அமெரிக்கத் தூதுவர் அரசியல் தீர்வு குறித்து முக்கிய பேச்சு



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் தலைமையிலான குழுவினருடன் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலெய்னா பி. டெப்லிட்ஸ் தலைமையிலான குழுவினர் இன்று முக்கிய பேச்சு நடத்தியுள்ளனர்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின்

☞2

## ஆசிரியர்களை அவமதித்த கெஹலிய பகிரங்க மன்னிப்புக் கோர வேண்டும்!

### இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்து

ஆசிரியர்கள் தொடர்பில் அவதூறாகக் கருத்துரைத்த ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, ஆசிரியர்களிடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோர வேண்டும்.

- இவ்வாறு மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் எம்.பி. வலியுறுத்தினார்.

☞2

## பளை விபத்தில் ஒருவர் மரணம்

கிளிநொச்சி மாவட்டம், பளை, முல்லையடிப் பகுதியில் இன்று இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முல்லையடிப் பகுதியில் இன்று அதிகாலை கனரக வாகனமொன்று வீதியோரமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அதன் மீது வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த

☞2




## யாழ்., கிளிநொச்சி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த சில நாள்களுக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போதே குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அவரின் கருத்தின் அடிப்படையில், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, கொழும்பு, பிலியந்தல உட்பட்ட பகுதிகளில் 19 பேருக்குக் குறித்த வகை வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் இதுவரையில் குறித்த 'டெல்டா' வைரஸ் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 39 ஆக அதிகரித்துள்ளது.

## கூட்டமைப்புடன் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது அரசியல் தீர்வு தொடர்பில் நீண்ட நேரம் பேசப்பட்டது எனக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன் தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் உள்ளிட்ட பரந்துபட்ட விடயங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவும் பங்கேற்றிருந்தார்.

## பருத்தித்துறை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொதுச்சந்தையை தற்காலிகமாக மூடுவதா அல்லது கட்டுப்பாடுகளுடன் இயங்க அனுமதிப்பதா என்பது தொடர்பில் பருத்தித்துறை சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

## பருத்தித்துறையில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் பக்தர்கள் பங்கேற்பின்றி திருவிழாக்கள் நடைபெற்று வந்த நிலையில் ஆலயத் திருவிழாக்களை 150 பேருடன் நடத்தலாம் என்று திருத்தப்பட்ட சுற்றறிக்கை வெளிவந்ததை அடுத்து தேர்த்திருவிழா பக்தர்கள் பங்கேற்புடன் நேற்று நடைபெற்றிருந்தது.

இந்நிலையில், பருத்தித்துறை முதலாம், 2 ஆம், 3 ஆம் குறுக்குத்தெருவில் எழுமாற்றாக மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளியாகி இருந்தன. இதன்போது குறித்த பகுதிகளில் 19 பேருக்குக் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இவ்வாறு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் சிலர் பருத்தித்துறை சிவன் கோயில் தேர்த்திருவிழாவில் பங்கேற்றிருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்தே, சிவன் கோயில் தீர்த்தத் திருவிழாவில் பக்தர்கள் பங்கேற்க பருத்தித்துறை சுகாதாரப் பிரிவினரால் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்த அறிவுறுத்தல் நேற்றிரவு 10 மணியளவில் ஆலய நிர்வாகத்துக்கு சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக இன்று தீர்த்தத் திருவிழா ஆலய பூசகர்கள், நிர்வாகத்தினர் மட்டும் பங்கேற்கும் வகையில் ஆலயத்துக்குள்ளே நடத்துவதற்குச் சுகாதாரப் பிரிவினரால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.

கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்ட நபர்கள் பங்கேற்ற தேர்த்திருவிழாவில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்சாரம் தாக்கி .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டு நிர்மாணப் பணிகளின்போது தவறுதலாக மின்சார வயர் ஒன்றை சிறுவன் பிடித்ததையடுத்து, மின்சாரத் தாக்குதலுக்குள்ளாகியுள்ளான்.

பின்னர் உறவினர்கள் சிறுவனை மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் அவன் உயிரிழந்துள்ளான்.

மட்டக்களப்பு நீதிவானின் உத்தரவையடுத்து சிறுவனின் சடலம் பிரேத பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

## ஆசிரியர்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியவை வருமாறு -

கொரோனா வைரஸ் தொற்றால் பாடசாலைகள் முடங்கியுள்ள சூழ்நிலையில், தங்களை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டு தொழில்நுட்ப உதவியோடு மாணவர்களுக்கான கல்வியை ஆசிரியர்கள் மிகவும் அர்ப்பணிப்போடு முன்னெடுத்து வருகின்றார்கள்.

இந்த வகுப்புகளை முன்னெடுக்கின்றபோது அவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். எனினும், மாணவர்களின் நலனைக் கருதி பணியாற்றி வருகின்றனர். இவ்வாறு அர்ப்பணிப்புடன் தங்களுடைய கடமைகளை செய்து கொண்டிருக்கின்ற ஆசிரியர்களை அவமதிக்கும் வகையில், அவதூறாக அமைச்சர் கருத்து வெளியிடுகிறமை வெறுக்கத்தக்க, கண்டிக்கத்தக்க விடயமாகும். எனவே, இந்த விடயம் தொடர்பாக அமைச்சர், ஆசிரியர் சமூகத்திடம் பகிரங்கமாக மன்னிப்புக் கோரவேண்டும்.

இன்று ஆசிரியர்களுக்கு ஏற்பட்டிருக்கின்ற நிலைமை நாளை ஏனைய அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்படலாம். எனவே, இன்று ஆசிரியர்களுக்கு எதிராகக் கருத்து தெரிவித்திருக்கின்ற அமைச்சருக்கு எதிராக பெற்றோர்கள் தங்களுடைய எதிர்ப்புநடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## பளை விபத்தில் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஓட்டோ, வாகனம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதை அவதானிக்காது வாகனத்தின் மீது மோதி விபத்துக்குள்ளாகியது.

குறித்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த மூவரில் பொல்காவலை பகுதியைச் சேர்ந்த 20 வயதுடைய கோசல என்பவர் உயிரிழந்துள்ளார். அதில் பயணித்த மேலும் இருவர் காயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com

**மிகக் குறைந்த கட்டணத்தில் வரி விளம்பரங்கள்**

உங்கள் நாளாந்த தேவைகளில் பொருள்கள், ஆதனங்கள், வாகனங்கள், வளர்ப்புப் பிராணிகளை வாங்க, விற்க மற்றும் வாடகைக்குப் பெறவும், மண மக்கள் தேவை போன்ற அத்தியாவசிய அறிவித்தல்களைப் பிரசுரிக்கவும் மிகக் குறைந்த கட்டணத்தில் 'காலைக்கதிர்' சேவையைப் பெற்றுக்கொள்ள

**076 443 8619** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து தினசரி இருமுறை - அதிகாலையும் மாலையும் - உலகெங்கும் உள்ள பல்லாயிரம் தமிழ் வாசகர்களை தவறாது எட்டும் ஒரே நாளிதழ் ஊடாக குறைந்த கட்டணத்தில் விளம்பரம் செய்து அதிக பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.



நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# 'ஷொக்' அடிக்கும் மின் விற்பனை

**சர்வதேச நாடுகளிடம் எல்லாம் கடன் வாங்கிக் குவித்த இலங்கை, இப்போது கடனிறுக்க வழியின்றித் தவிக்கின்றது. கடன் தவணைப் பணத்தைக் கட்டுவதற்காக நாட்டின் சொத்துக்களை விற்கும் அவல நிலைமை.**

**அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை 99 வருடங்களுக்கான குத்தகை என்ற பெயரில் சீனாவுக்குத் தாரைவார்த்தமை இதற்கு நல்ல உதாரணம். துறைமுகத்தை சீனாவுக்குக் கையளித்து, அதன் மூலம் வந்த நிதியில் பழைய கடன்களுக்கான தவணைப் பணத்தை – நிலுவைக் கட்டணத்தை – செலுத்தியது இலங்கை.**

**கடன் வாங்கிக் கலியாணம் என்பதுதான் இதன் நிலைமை.**

**அப்படி சொத்துக்களை விற்கும் வரிசையில் பல அத்தியாவசிய சேவைகளையும் ஏலத்தில் விடுவது போல வெளிநாட்டு நிறுவனங்கள், தரப்புகளிடம் விற்று, கடன் அடைக்க நிதி தேடும் வழியை நாடுகின்றது அரசு.**

**அத்தகைய சேவைகளை இலாப நோக்கில் அரசே நடத்தி, வருமானத்தை ஈட்டுவதை விடுத்து, அந்தச் சேவைகளை முன்னெடுக்கும் பொறுப்பை தனியாரிடம் – குறிப்பாக வெளிநாடுகளிடம் – ஒப்படைத்து, அதற்கான குறுகிய கட்டணத்தை அறவிட்டுப் பணம் தேடும் வழியை முன்னெடுக்கின்றது அரசு.**

**அரச சொத்துக்களையும் சேவைகளையும் சொற்ப பெறுமதிக்குக் கைப்பற்றிக் கொள்ளும் வெளிநாட்டுக் கம்பனிகளும், நிறுவனங்களும், அவற்றின் மூலம் பெருந்தொகையை இங்கு சம்பாதித்து, சொற்பத்தை அரசுக்குக் கட்டணமாகச் செலுத்தி விட்டு, மிகுதியைச் சுருட்டிச் செல்கின்றன.**

**அரசின் இயலாத்தனம் – 'பிச்சை' ஏந்தும் போக்கு – வெளிநாடுகளும் அவற்றின் நிறுவனங்களும் இலங்கையில் – இலங்கை மக்கள் மீது – தமது சுரண்டலை வெகு சாமர்த்தியமாக முன்னெடுப்பதற்கு வாய்ப்பளித்து நிற்கின்றது என்பது தான் நிலைமை.**

**அந்த வரிசையில், இலங்கை மக்களுக்கான மின் விநியோகத்திலும் தமது சுரண்டலை அந்தத் தரப்புகள், சாமர்த்தியமாக முன்னெடுப்பதற்கான வாசல்களைத் திறந்து விடத் தயாராகி வருகின்றது அரசு.**

**சூரியசக்தி மற்றும் காற்று மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்து வழங்கும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு குறிப்பாக சீனக் கம்பனிகளுக்கு வாசலை அகலத் திறந்து விடும் வகையில் 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க இலங்கை மின்சாரக் கட்டளைச் சட்டத்தில் பெரியமாற்றங்களைச் செய்வதற்கு அரசு தயாராகி உள்ளது.**

**இலங்கை மின்சார ஊழியர் சம்மேளனம், இது தொடர்பில் வெளிப்படையாக அரசைக் குற்றம் சுமத்தியிருக்கின்றது.**

**சூரிய சக்தியும், காற்றும் எங்கள் இயற்கை மூலவளம். அவற்றிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்கான கட்டமைப்பை உருவாக்குவது மட்டுமே மூலதனம். யாரோ வந்து தமது மூலதனம் மூலம் எமது மூலவளத்தைப் பயன்படுத்திச் சூறையாடிச் சுரண்டிச் செல்வதற்கான மற்றொரு கதவை அரசு திறந்து விடுகின்றது என்று குற்றம் சுமத்துகின்றனர் மின்சார ஊழியர் சம்மேளன உறுப்பினர்கள்.**

**இப்போது சூரியசக்தி மூலம் பொது மக்களிடம் உற்பத்தியாகும் மின்சாரத்தை யுனிட் ஒன்று எட்டு ரூபா என்ற அடிப்படையில் கொள்வனவு செய்யும் இலங்கை மின்சாரசபை, அந்தத் திட்டத்தை ஊக்கப்படுத்துவதை விடுத்து, வெளிநாட்டுக் கம்பனிகளை இங்கு முதலிட்டு மின்சாரத்தை உற்பத்தி செய்து தனக்கு விற்பதற்கு வழி வகைகளை முன்னின்று மேற்கொள்கின்றது.**

**இப்போது பொது மக்களின் மூலம் கிடைக்கும் மின்சாரத்துக்கு யுனிட் ஒன்றுக்கு எட்டு ரூபா செலுத்தும் இலங்கை மின்சார சபை, புதிய சட்டத்திருத்தங்கள் மூலம் வருவிக்கப்படும் வெளிநாட்டுக் கம்பனிகளிடமிருந்து ஒரு யுனிட் மின்சாரத்தை இருபத்திரண்டு ரூபா (அதாவது யுனிட்டுக்கு பதினான்கு ரூபா மேலதிகம்) செலுத்திப் பெறுவதற்குத் தயாராகியிருப்பதாகவும் கூறப்படுகின்றது.**

**எங்கள் மக்களிடமிருந்து மிகக் குறைந்த கட்டணத்தில் மின்சாரத்தை வாங்கும் இலங்கை மின்சார சபை, எமது நாட்டின் மூலவளத்தைப் பயன்படுத்தி, எங்களுக்கு மின் உற்பத்தி செய்து தரும் வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வெற்றிலை வைத்து அழைத்து, சுமார் மூன்று மடங்கு பெறுமதிக்கு மின்சாரத்தை வாங்கப் போகின்றது.**

**'ஷொக்' அடிக்கும் இந்த உண்மை, வெளிநாடுகளின் சுரண்டலுக்கு கொழும்பு ஆட்சிப் பீடம் துணை போகின்றது என்பதற்கு உதாரணமும் கூட.**

# யால தேசியப் பூங்காவிலிருந்து 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அபகரிப்பதற்கு முயற்சி

## அமைச்சர் ரத்நாயக்க மறுப்பு



யால தேசியப் பூங்காவிலிருந்து 12 ஆயிரம் ஏக்கர் நிலத்தை அபகரிக்கும் முயற்சி தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வெளியிட்ட அறிக்கையை வன விலங்கு மற்றும் வனப் பாதுகாப்பு அமைச்சர் சி. பி. ரத்நாயக்க மறுத்துள்ளார்.

இது தொடர்பாகக் கருத்து வெளியிட்டுள்ள அமைச்சர் –

இதுபோன்ற எந்தத் திட்டமும் அரசாங்கத்தால் செயல்படுத்தப்படவில்லை என்று கூறினார்.

ஒரு பொறுப்புள்ள அமைச்சராக, யால தேசியப் பூங்காவில் இதுபோன்ற செயல்களை தாம் அனுமதிக்க முடியாது. இதுபோன்ற திட்டம் அமுல்படுத்தப்படுவதற்கு முன்னதாக ஒரு முன்மொழிவு முன்வைக்கப்பட்டிருக்க வேண்டும்.

இதுவரை இதுபோன்ற எந்தத் திட்டமும் முன்வைக்கப்படவில்லை என்று அமைச்சர் கூறினார். இந்த விவகாரத்தில் வதந்திகள் பரவி வருகின்றன.

ஆனால் அமைச்சராக, தாம், எதிர்க்கட்சித் தலைவர் கூறிய கூற்றை முற்றிலுமாக மறுக்கிறார் எனக் குறிப்பிட்ட அமைச்சர், யால வனப்பகுதியில் யாரும் தலையிட அனுமதிக்கப் போவதில்லை என்றும் கூறினார்.

# கிரிக்கெட் அதிகாரிகளுடனான கோட்டாவின் பேச்சு ஒத்திவைப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா கிரிக்கெட் அதிகாரிகளுக்கிடையேயான சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பாடசாலையிலிருந்து தேசிய மட்டத்துக்கு கிரிக்கெட்டை மேம்படுத்துவதற்கான குறுகிய மற்றும் நீண்டகால மூலோபாயம் தொடர்பாகக் கிரிக்கெட் அதிகாரிகள் நேற்று ஜனாதிபதியை சந்திப்பார்கள் என்று அமைச்சர் நேற்று காலை டுவீட் செய்திருந்தார்.

இந்தக் கலந்துரையாடல் விளையாட்டின் வளர்ச்சிக்கான தேவைகளுடன் முன்னோக்கி செல்லும் பாதை தொடர்பிலும் கவனம் செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

இருப்பினும், இந்த சந்திப்பு பின்னர் வேறு ஒரு திகதிக்கு பிற்போடப்பட்டுள்ளதாக நாமல் ராஜபக்ஷ நேற்று மாலை டுவீட் செய்துள்ளார். இதற்கான காரணத்தை அவர் அறிவிக்கவில்லை.

# இரண்டு பிள்ளைகளின் தந்தை வெலிகமவில் சடலமாக மீட்பு

விகாரைக்கு கொண்டு செல்வதற்காகப் பூக்களைப் பறித்து வருகிறேன் எனக் கூறி வீட்டிலிருந்து வெளியேறிச் சென்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை ஒருவரின் சடலம் வெலிகம, கடற்கரையில் நேற்று (புதன்கிழமை) கரையொதுங்கியுள்ளது என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வெலிகம பொலிஸ் பிரிவைச் சேர்ந்த 57 வயதுடைய நபரின் சடலமே இவ்வாறு கரையொதுங்கியுள்ளது.

குறித்த நபர் கடந்த திங்கட்கிழமை அதிகாலை 5.45 மணியளவில் வீட்டிலிருந்து வெளியேறிச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அவர் வீடு திரும்பாதமையால் அவரைத் தேடும் பணியில் உறவினர்களும் பிரதேச மக்களும் இணைந்து ஈடுபட்டு வந்த நிலையிலேயே அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குறித்த நபர் தினமும் விகாரைக்குப் பூக்களை வழங்கி வருபவர் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெலிகம பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 72 வீதமான கல்விச் சமூகத்தினருக்கு யாழ்ப்பாணத்தில் தடுப்பூசி ஏற்றப்பட்டது

ஆசிரியர், அதிபர், கல்விசாரா ஊழியர்களென யாழில் 72 வீதமானவர்களுக்கு கொரோனாவிற்கான சினோபோர்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சார்ந்த 7 ஆயிரத்து 432 பேர் இதுவரை கொரோனாவிற்கான சினோபோர்ம் தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டுள்ளனர்.

பாடசாலைகளை மீளவும் ஆரம்பிக்கும் வகையில் ஆசிரியர், அதிபர், கல்விசாரா ஊழியர்களுக்கு நாடு முழுவதுமாகத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த வாரம் முதல் இரண்டாம் கட்டத்துக்கான முதல் டோஸ் தடுப்பூசியை யாழ்ப்பாண மாவட்டத்தில் 51 ஆயிரத்து 390 பேர் இதுவரை பெற்றுக்கொண்டனர்.

# இலங்கையில் இணையவழிக் கல்வி சவால்களுக்கு மத்தியில் மாணவர்கள்



இலங்கையில் இணையவழியில் கல்வி பயில்வது மாணவர்களுக்குச் சவாலான ஒன்றாகக் காணப்பட்டு வருகிறது.

பலதரப்பட்ட இடங்களிலும் இணையவழிக் கல்விக்கான வலையமைப்பு வசதியின்மை காரணமாக மாணவர்கள் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுத்து கல்வி பயிலவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அவ்வாறான இடங்களில் மாணவர்கள் பல மைல் தூரம் சென்றும், மரங்களின் மேலும், மலைகளின் மேலும் சென்று கல்வி கற்கவேண்டிய நிலைக்கு ஆளாகியுள்ளனர்.



# அமெரிக்காவின் ஓரிகான் மாகாணத்தில் 10ஆவது நாளாக பற்றி எரியும் காட்டுத் தீ

## நூற்றுக்கணக்கான மக்கள் வீடுகளை விட்டு வெளியேற்றம்

*அமெரிக்காவின் ஓரிகான் மாகாணத்தில் 10ஆவது நாளாக பற்றி எரியும் காட்டுத்தீயால் 2 லட்சத்து 12 ஆயிரம் ஏக்கர் வனப்பகுதிகள் தீயில் எரிந்து நாசமாகின. காற்றின் வேகத்தால் காட்டுத் தீ மளமளவென பரவி கொளுந்துவிட்டு எரியும் காட்சிகள் வெளியாகியுள்ளன.*

*இதுவரை 21 வீடுகள் மற்றும் 54 கட்டடங்கள் தீக்கிரையாகி உள்ள நிலையில் நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் குடியிருப்புகளை விட்டு வெளியேறி வருகின்றனர்.*

## அமெரிக்காவில்

# போதைப்பொருள் பயன்பாட்டால் கடந்த ஆண்டில் 93,000 பேர் சாவு



அமெரிக்காவில் கடந்த ஒரே ஆண்டில் போதைப்பொருள் பயன்படுத்தியதில் 93 ஆயிரம் பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

நோய்க் கட்டுப்பாடு மற்றும் தடுப்பு மையங்களின் தேசிய உயிரியல் புள்ளிவிவர அமைப்பின் அறிக்கையின்படி, வெர்மான்ட், கென்டக்கி, தென் கரோலினா, மேற்கு வர்ஜீனியா மற்றும் கலிபோர்னியாவில் போதைப் பொருள் பயன்படுத்தியதால் அதிக உயிரிழப்பு ஏற்பட்டது தெரியவந்துள்ளது.

ஓபியாய்டு எனப்படும் போதைப் பொருளால் இதுவரை அதிகரித்திருந்த உயிரிழப்பு தற்போது சட்டவிரோதமாகத் தயாரிக்கப்படும் பென்டானைல் என்ற போதைப்பொருளால் அதிக உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன.

பென்டானைல் பயன்படுத்தியதில் மட்டும் கிட்டத்தட்ட 68 ஆயிரம் பேர் உயிரை மாய்த்துக் கொண்டனர் என அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.



# போப் ஆண்டவர் பிரான்சிஸ் வத்திக்கானுக்கு திரும்பினார்

கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான 84 வயதான போப் ஆண்டவர் பிரான்சிஸ் பெருங்குடல் பிரச்சினை காரணமாக வயிற்று வலியால் அவதிப்பட்டு வந்தார். இதற்கு சிகிச்சை பெறுவதற்காக இத்தாலி தலைநகர் ரோமில் உள்ள ஜெமெல்லி வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டார்.

அங்கு அவருக்கு கடந்த 4 ஆம் திகதி அறுவை சிகிச்சை நடந்தது. அறுவை சிகிச்சைக்குப் பின் அவருக்கு லேசான காய்ச்சல் ஏற்பட்டு பின்னர் அது குறைந்தது. இருப்பினும் அவர் தொடர்ந்து வைத்திய சாலையில் டாக்டர்களின் கண்காணிப் பில் இருந்து வந்தார். அவர் வைத்தியசாலையிலேயே தினசரி பிரார்த்தனை மற்றும் ஞாயிறு வழிபாட்டை நடத்தினார்.

இந்த நிலையில் அறுவைச் சிகிச்சை நடந்த 10 நாள்களுக்குப் பிறகு போப் ஆண்டவர் பிரான்சிஸ் நேற்று வத்திக்கான் திரும்பினார்

## மருத்துவத்துக்காக மெகுல் சோக்சிக்கு டொமினிகா உயர் நீதிமன்றம் பிணை



தீவுகளில் குடியுரிமை பெற்று வசித்து வந்த நிலையில் அங்கிருந்து மாயமான அவர் கடந்த மே மாதம் 23ஆம் திகதி அருகில் உள்ள டொமினிகாவில் கண்டுபிடிக்கப்பட்டு, சட்டவிரோத குடியேறத்திற்காக சிறையில் அடைக்கப்பட்டார்.

தான் கடத்தப்பட்டேன் எனவும் தன்னை மருத்துவ சிகிச்சை பெற மறுபடியும் ஆண்டிகுவா அனுப்ப வேண்டும் என்று சோக்சி தாக்கல் செய்த மனுவை விசாரித்த டொமினிகா உயர்நீதிமன்றம் அனுமதி அளித்தது.

## பாகிஸ்தானில்

# பஸ் மீது தாக்குதல் 13 பேர் உயிரிழப்பு



பாகிஸ்தானில் நீர்மின் திட்டம் கட்டுமான தொழிலாளர்களை குறிவைத்து தாக்கப்பட்டதில், 13 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர்.

பாகிஸ்தானில் பல பில்லியன் அளவில் முதலீடு செய்து சீனா பல்வேறு கட்டுமானப் பணிகளை செய்து வருகிறது. சீனா– பாகிஸ்தான் பொருளாதார காரிடார் என்ற பெயரில் சீனா முதலீடு செய்து, பாகிஸ்தானில் வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அதன் ஒரு பகுதியாக டசு அணையில் நீர்மின்திட்டம் அமைப்பதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதில் சீனாவைச் சேர்ந்த தொழிலாளர்கள், பொறியியலாளர்கள் வேலைபார்த்து வருகின்றனர். உப்பேர் கோஹிஸ்தானில் நடைபெற்று வரும் இந்த பணிக்காக தொழிலாளர்கள் பஸ்ஸில் சென்று வருவார்கள்.

அவ்வாறு இன்று பஸ்ஸின் செல்லும்போது, திடீரென பஸ் வெடித்து சிதறி அருகில் உள்ள பள்ளத்தில் கவிழ்ந்தது. இதில் சீனாவைச் சேர்ந்த 7 பொறியியலாளர்கள், 2 இராணுவ வீரர்கள் உள்பட 13 பேர் உயிரிழந்தனர். 39இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்துள்ளனர்.

சாலையோரம் வைக்கப்பட்டிருந்த பொருள் வெடித்து விபத்து ஏற்பட்டதா? அல்லது பஸ்ஸுக்குள் இருந்த பொருள் வெடித்து விபத்து ஏற்பட்டதா? என்பது குறித்த தெளிவான தகவல் வெளியாகவில்லை.

காயம் அடைந்தவர்களை ஏர் ஆம்புலன்ஸ் மூலம் மீட்டு மருத்துவமனைகளில் சேர்க்க அரசின் அனைத்து துறைகளும் ஒன்றாக இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளன.

## தென் ஆபிரிக்காவில் கொள்ளைக் கும்பல் துப்பாக்கிச் சூடு; 5 வயது சிறுவன் சாவு

தென் ஆபிரிக்காவில் கொள்ளைக் கும்பல் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் 15 வயது சிறுவன் பரிதாபமாக கொல்லப்பட்டான்.

முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜுமா (Jacob Zuma) கைது செய்யப்பட்டமையை அடுத்து நடந்துவரும் போராட்டத்தை பயன்படுத்தி சில கொள்ளைக் கும்பல் சூறையாடலில் ஈடுபடுவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் கொள்ளைக் கும்பல் சூறையாடலின் போது நடத்திய தாக்குதலில் 15 வயது சிறுவன் பரிதாபமாக சுட்டுக் கொல்லப்பட்டான்.

அங்கு கொள்ளைக் கும்பலால் 70இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டு உள்ளனர் எனவும், பல்வேறு தொழில்களில் ஈடுபடுபவர்கள் கொள்ளையர்களால் நசுக்கப்படுகின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.





# இந்தியாவில் தினசரி கொரோனா பாதிப்பு மீண்டும் 40 ஆயிரத்தைத் தாண்டியது

இந்தியாவில் கொரோனாப் பாதிப்பின் இரண்டாவது அலை மெல்ல மெல்ல கட்டுக்குள் வரத்தொடங்கியுள்ளதாக அண்மைய தரவுகள் தெரிவித்துவந்தன. ஆயினும் கடந்த சில தினங்களாக முப்பதாயிரத்தை அண்மித்து வந்த தினசரி தொற்றாளர்களின் எண்ணிக்கை, மீண்டும் நாற்பதாயிரத்தைக் கடந்துள்ளது.

இதுதொடர்பாக இந்திய மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், நாட்டில் கடந்த 24 மணிநேரத்தில் 41 ஆயிரத்து 806 பேர் கொரோனாப் பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதனால், மொத்தக் கொரோனாப் பாதிப்பு எண்ணிக்கை 3 கோடியே 9 லட்சத்து 87 ஆயிரத்து 880ஆக அதிகரித்துள்ளது.

கொரோனாப் பாதிப்பால் ஒரேநாளில் 581 பேர் உயிரிழந்துள்ளனர். இதன்படி, மொத்த உயிரிழப்பு எண்ணிக்கை 4,11,989 ஆக உயர்ந்துள்ளது. கடந்த 24 மணிநேரத்தில் 39,130 பேர் குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இதனால் குணமடைந்தோரின் மொத்த எண்ணிக்கை 3 கோடியே ஒரு லட்சத்து 43 ஆயிரத்து 850 ஆகப் பதிவாகியுள்ளது. இதன்மூலம் குணமடைவோர் எண்ணிக்கை 97.28 சதவீதமாகப் பதிவாகியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'காவிரி விவகாரத்தில் நீதியின் குரலே தேசியக் குரலாக ஒலிக்கவேண்டும்!'

## கமல்ஹாசன் வலியுறுத்து



காவிரி ஆற்றின் குறுக்கே மேகதாது அணையைக் கட்டியே தீருவோம் என கர்நாடக அரசும் அதேசமயம் அதைத் தடுத்தே தீருவோம் என தமிழக அரசும் தீர்மானமாக இருக்கின்றன. காவிரி ஆற்றின் குறுக்கே அணை கட்டுவதற்குத் தமிழகம் முழுவதும் இருந்து அரசியல் கட்சியினரும் பொதுமக்களும் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர். இந்த நிலையில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல்ஹாசனும் தனது எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 'நடந்தாய் வாழி காவிரி என்று பாடும் நம்மை, நின்றாய் நீ காவிரி என்று வாடும் நிலைக்குத் தள்ளுகிறது கர்நாடகா. தடையேதுமின்றி ஓடிக் கொண்டிருக்க வேண்டிய நதியில் ஏற்கெனவே கர்நாடகா பல அணைகளைக் கட்டிவிட்டது. மேலும் ஒரு அணையைக் கட்டி, தமிழக விவசாயிகள் வாழ்வை கேள்விக்குறியாக்க நினைப்பது கண்டிக்கத்தக்கது.

இரு மாநிலங்களின் நதிநீர் பங்கீட்டுப் பிரச்சினையைத் தீர்க்கவேண்டிய மத்திய அரசு அதை உணரவில்லை. அரசியல் காரணங்களுக்காக காவிரிப் பிரச்சினையில் கர்நாடகா பக்கம் மத்திய அரசு சாய்ந்திருப்பது வழமை. மேகதாது விவகாரத்தில் இந்த அநீதிப் போக்கு இனியும் தொடர்வது நியாயமல்ல' என்று கூறியிருக்கிறார்.




# கொங்குநாட்டை தனி மாநிலமாக உருவாக்க தருமபுரியில் பா.ஜ.க. கூட்டத்தில் தீர்மானம்

தருமபுரியில் பா.ஜ.க. மாவட்ட செயற்குழுக் கூட்டம் நேற்று நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் பா.ஜ.க. மாநிலச் செயலாளர் கார்த்திகாயினி கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

இந்த செயற்குழுக் கூட்டத்தில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதில் முதலாவதாக மேற்கு மாவட்டங்களை ஒருங்கிணைத்து கொங்கு நாட்டை தனி மாநிலமாக உருவாக்க வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'கடத்தூர் பகுதிக்கு உட்பட்ட பொதியம்பல்லம் தடுப்பணையினை நீர்த்தேக்க அணையாகக் கட்டி கொங்கிரீட் கால்வாயாக அமைக்க வேண்டும், ஒகேனக்கல் காவிரி உபரி நீரை நீரேற்று குழாய் மூலம் அனைத்து ஏரிகளுக்கும் நிரப்பவேண்டும், தருமபுரி மாவட்டம் மற்றும் நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் ஒகேனக்கல் கூட்டு குடிநீர் போதிய அளவு வழங்க வேண்டும், மரவள்ளிக் கிழங்கிற்கு உரிய விலையினை அரசு நிர்ணயம் செய்யவும் மரவள்ளிக்கிழங்கினை அரசே கொள்முதல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும், கரும்பு விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையுடன் அடிப்படை ஆதார விலையை உயர்த்தியும் கடன் வசதியும் ஏற்படுத்தித் தர வேண்டும் உள்ளிட்ட 18 தீர்மானங்கள் பா.ஜ.க. செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. பா.ஜ.க. மாவட்டத் தலைவர் அனந்தகிருஷ்ணன் உள்ளிட்ட பல்வேறு நிர்வாகிகள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.



# ஓராண்டுக்குப் பின்னர் நேரடியாக நடைபெற்ற இந்திய மத்திய அமைச்சரவைக் கூட்டம்!

ஓராண்டுக்குப் பின்னர் முதல் முறையாக இந்திய மத்திய அமைச்சரவைக் கூட்டம் நேரடியாக நடைபெற்றது. கொரோனா காரணமாக கடந்த ஒரு வருடமாக இந்திய மத்திய அமைச்சரவைக் கூட்டம் காணொலி வாயிலாகவே நடைபெற்றுவந்தது. அமைச்சர்கள் அனைவரும் நேரடியாகப் பங்கேற்ற கூட்டமானது கடந்த ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்திலேயே நடைபெற்றிருந்தது. அதன் பின்னரான அனைத்து அமைச்சரவைக் கூட்டங்களும் காணொலித் தொழில்நுட்பத்தினூடாவே நடத்திருந்தன.

தற்போது கொரோனாவின் இரண்டாம் அலையின் தாக்கம் குறைந்திருப்பதை அடுத்து அமைச்சர்கள் நேரடியாகப் பங்குபெற்ற கூட்டம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இல்லத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத்தொடர் குறித்து விவாதிக்கப்பட்டது. எதிர்க் கட்சிகள் பல முக்கிய பிரச்சினைகள் குறித்து நாடாளுமன்றத்தில் கேள்விகளை எழுப்ப உள்ள நிலையில், அதனைச் சமாளிப்பது குறித்து அமைச்சர்களுக்கு பிரதமர் மோடியும் உள்துறை அமைச்சர் அமித்ஷாவும் ஆலோசனைகளை அளித்தார் எனவும் கூறப்படுகிறது. இந்தக் கூட்டத்தில் அண்மையில் புதிதாகப் பொறுப்பேற்ற 43 அமைச்சர்களும் பங்கேற்றிருந்தனர்.

# கல்வி நிலையங்களை மீள ஆரம்பிப்பது ஒத்திவைப்பு புதுச்சேரி பள்ளிக்கல்வி அமைச்சர் நமச்சிவாயம் தகவல்



கொரோனாவுக்காக புதுச்சேரியில் மூடப்பட்டிருந்த பாடசாலைகளும் கல்லூரிகளும் நாளை திறக்கப்படும் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், அவற்றைத் திறக்கும் திகதி ஒத்திவைக்கப்படுவதாக புதுச்சேரியின் பள்ளிக்கல்வி அமைச்சர் நமச்சிவாயம் தெரிவித்தார்.

கொரோனா பரவும் சூழல் இருப்பதால் கல்வி நிலையங்களைத்திறப்பதை தள்ளிவைக்க வேண்டும் என மாணவர்களின் பெற்றோர் கோரிக்கைகளை முன் வைத்திருந்தனர். இதைத்தொடர்ந்து கல்வி நிலையங்களைத் திறப்பதனை ஒத்திவைப்பது குறித்து முதலமைச்சருடன் ஆலோசித்து இந்த ஒத்திவைப்பு தொடர்பான முடிவை எடுத்துள்ளதாக அமைச்சர் அறிவித்திருக்கிறார்.

சுகாதாரத் துறையினரின் ஆலோசனைகளைப் பெற்ற பின்னர், கல்வி நிலையங்களைத் திறக்கும் திகதி பற்றி முடிவெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

# கொரோனா அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கு 35 லட்சம் பெறுமதியான வெண்டிலேட்டர்




அம்பாறை மாவட்ட திறன் வான்மையாளர் சங்கத்தினால் கொடையாளர்களிடமிருந்து சேகரிக்கப்பட்ட நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 35 லட்சம் பெறுமதியான வெண்டிலேட்டர் உபகரணம் நேற்று முன்தினம் அம்பாறை பொது வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் உப்புல் விஜயநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

இன் நிகழ்வில் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியர் திலக் ராஜபக்ச, அம்பாறை மாவட்ட அரச அதிபர் டி. எம்.எல். பண்டாரநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெண்டிலேட்டர் கொள்வனவிற்காக அன்பளிப்புச் செய்யப்பட்ட தொகையில் அதிகூடிய தொகையை வழங்கியிருந்த சாய்ந்தமருது-மாளிகைக்காடு வர்த்தக சங்கம் இதன்போது நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்த நினைவுச் சின்னத்தை சாய்ந்தமருது-மாளிகைக்காடு வர்த்தக சங்கத் தலைவர் எம். எம். முபாரக், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இதன்போது வைத்தியசாலையின் வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் சாய்ந்தமருது-மாளிகைக்காடு வர்த்தக சங்க செயலாளர் எம்.எப்.ஏ.வாசித் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## சேதனப்பசளை மற்றும் இயற்கை பீடை நாசினி பாவனைகள் கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தால் விழிப்பூட்டல்



சேதனப்பசளை மற்றும் இயற்கை பீடை நாசினி பாவனை மூலம் எதிர்கால சந்ததியை நோயற்ற சமூகமாக மாற்றும் ஜனாதிபதியின் சௌபாக்கிய நிகழ்ச்சித்திட்ட விழிப்புணர்வு நிகழ்வு கிழக்கு மாகாண விவசாயத்திணைக்களத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இதற்கமைவாக இன்று அம்பாறை மாவட்டத்திலும், ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிலும் ஒலிபெருக்கி மூலமும் துண்டுப்பிரசுரங்கள் மூலமும் விழிப்பூட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அக்கரைப்பற்று கிழக்கு விவசாயப் போதனாசிரியர் எம்.எச்.எம். சஜாத் தலைமையில் ஏற்பாடு செய்யப்பட்ட விழிப்புணர்வு நிகழ்வில் மாகாண விவசாயத்திணைக்களத்தின் அக்கரைப்பற்று வலய உதவி விவசாயப்பணிப்பாளர் திருமதி ஏ.ரவீந்திரன் மற்றும் தலைமைப்பீட விவசாயப்போதனாசிரியர் ஏ.எல். றபீக், பாடவிதான உத்தியோகத்தர் எம்.கோகுல்ராஜ் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டு விழிப்புணர்வு நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

ஜனாதிபதியின் வழிகாட்டலுக்கு அமைவாக எதிர்வரும் போகத்தில் இருந்து இரசாயனப்பசளை மற்றும் கிருமி நாசினிகள் தடை செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே எதிர்காலத்தில் விவசாயிகள் சேதனப் பசளை மற்றும் இயற்கை பீடை நாசினி களை தயாரிக்கவும் பயன்படுத்தவும் தங்களை தயார்படுத்திக் கொள்ளுதல் அவசியமானதாகும்.

இதனை மையமாக கொண்டே குறித்த ஒலி பெருக்கி மூலமான விழிப்புணர்வு நடவடிக்கை இன்று மேற்கொள்ளப்பட்டதுடன் அறிவுறுத்தல் ஆலோசனைகளும் வழங்கப்பட்டன.

அத்தோடு தேவையேற்படும் சந்தர்ப்பத்தில் விவசாய திணைக்கள் அதிகாரிகளை தொடர்பு கொண்டு பயிற்சி வகுப்புக்கள் மற்றும் செய்கை முறைகள் போன்ற மேலதிக தகவல்களை பெற முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.



## உகந்தமலை கந்தனின் ஆடிவேல் திருவிழா

கிழக்கின் தென்கோடியிலுள்ள வரலாற்று சிறப்புமிக்க உகந்தைமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் வருடாந்த ஆடிவேல்விழா உற்சவம் கடந்த 10 ஆம் திகதி கொடியேற்றதுடன் ஆரம்பமாகி தினமும் திருவிழாக்கள் பூஜைகளுடன் எளிமையாக நடந்தேறிவருகின்றது.

நேற்றிரவு அங்கு மிகவும் குறைந்த பக்தர்களுடன் முருக்பெருமான் எழுந்தருளி உள்வீதியுலா வந்தார். ஆலய பிரதமகுரு சிவஶ்ரீ சீதாராம் குருக்கள் தலைமையிலான குருக்கள் திருவிழாவை நடாத்தி வருகின்றனர்.

நாட்டின் கொவிட் நிலைமை காரணமாக பக்தர்கள் மற்றும் பாதயாத்திரீகர்களுக்கு அரச சுற்றுநிருபப்படி 50 பேருக்குள் மட்டுப்பட்டுத்தப்பட்டுள்ளது.. நேர்த்திக்கடனும் செலுத்தமுடியாது.

ஆலய குருக்கள் நிருவாகசபையினர் உபயகாரர்கள் என 50 பேருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அவர்களுக்கும் அன்ரிஜன் மற்றும் பி.சிஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட பின்னரே ஆலயத்துள் அனுமதிக்கப்பட்டு வருகின்றனர்.

பொலிஸார் இராணுவத்தினர் உள்ளிட்ட அனைவரையும் விசேட பாதுகாப்பு மற்றும் வீதிச்சோதனை கடமையில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மட்டக்களப்பில் 6 வயது சிறுவன் பரிதாப உயிரிழப்பு

மட்டக்களப்பு சின்ன ஊறணி பகுதியில் மின்சாரம் தாக்கியதில் 6 வயது சிறுவன் ஒருவன் பலியாகிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

மூன்று பிள்ளைகளைக் கொண்ட குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையான, தரம் இரண்டில் கல்வி கற்கும் ஆறு வயது நிரம்பிய சிறுவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

அவர்களின் வீட்டினை உடைத்து புதிதாக நிர்மானித்து வரும் நிலையில் குறித்த சிறுவனின் தாய் மற்றும் சகோதரிகள் இருவருமாக இவர்களது வீட்டிற்கு அருகாமையிலுள்ள உறவினரின் வீட்டில் தற்காலிகமாக வசித்து வந்துள்ளனர்.

புதிதாக நிர்மானிக்கப்பட்டுவரும் வீட்டில் மின் இணைப்பு வேலைகள் இடம்பெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் மாலை வீட்டிற்குள் சென்ற சிறுவன் மின்சாரம் தாக்கப்பட்ட நிலையில் வீழ்ந்து கிடந்ததை கண்ட உறவினர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர்.

எனினும் சிறுவன் ஏற்கனவே உயிரிழந்து நிலையில் இருந்ததாக வைத்தியசாலை நிருவாகத்தினர் தெரிவித்துள்ளனர். மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவிற்கமைவாக சடலத்தை பார்வையிட்ட திடீர் மரணவிசாரணை அதிகாரி சிதம்பரப்பிள்ளை ஜீவரெத்தினம் உடலை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு சட்ட வைத்திய அதிகாரியிடம் கேட்டுக் கொண்டதற்கு அமைய உடற்கூற்றுப் பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## மட்டக்களப்பு மாமாங்கம் பகுதி தனிமைப்படுத்தலிலிருந்து விடுவிப்பு

கொரோனா வைரஸ் பரவலால் தனிமைப்படுத்தப்பட்டிருந்த மேலும் ஒரு பிரதேசம் இன்று காலை 6 மணி முதல் அமுலாகும் வகையில் முடக்கத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய, மட்டக்களப்பு மாவட்டத்தின் மண்முனைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாமாங்கம் கிராம சேவகர் பிரிவு தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது.

கொரோனா பரவல் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர் இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார்.

# வெற்றியாளர்களே பதக்கங்களை அணிந்து கொள்ள வேண்டும்

## சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் அறிவிப்பு




கொரோனாப் பரவல் காரணமாக டோக்கியோ ஒலிம்பிக்போட்டி கடும் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அரங்கேற இருக்கிறது. ஏற்கனவே இந்த போட்டியை நேரில் காண ரசிகர்களுக்கு அனுமதி கிடையாது என்று அறிவிக்கப்பட்டுவிட்டது.

இந்த நிலையில் இந்த ஒலிம்பிக் போட்டியில் பதக்கம் வெல்லும் வெற்றியாளர்களுக்கு வழக்கம்போல் பதக்க அணிவிப்பு நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினர்கள் கலந்துகொண்டு வீர, வீராங்கனைகளின் கழுத்தில் பதக்கத்தை அணிவித்து கௌரவிக்கும் நடைமுறை கடைப்பிடிக்கப்படுமா? என்று சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் தோமஸ் பச்சிடம் நேற்று நிருபர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

அப்போது அவர் பதிலளிக்கையில் 'பதக்கம் வெல்பவர்களின் கழுத்தில் பதக்கம் அணிவிக்கப் படமாட்டாது. பதக்க மேடையில் தட்டில் வைத்துப் பதக்கங்கள் வழங்கப்படும். அதனை அந்தந்த வீரர் அல்லது வீராங்கனைகளே எடுத்து தங்கள் கழுத்தில் அணிந்து கொள்ளவேண்டும். பதக்கத்தைத் தட்டில் எடுத்து வைப்பவர் தொற்றுப் பரவாத வகையில் கையுறை அணிந்து செயல்படுவார். பதக்கத்தைத் தட்டில் வைத்து வீரர்களிடம் கொண்டு கொடுப்பவரும், பதக்கத்தைப் பெறும் வீர, வீராங்கனைகளும் முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். இந்த நிகழ்ச்சிகளின்போது கை குலுக்கி வாழ்த்துத் தெரிவிக்கவோ, கட்டித்தழுவிப் பாராட்டவோ கூடாது' என்று தெரிவித்திருக்கிறார்.

# ரிஷப் பண்டுக்கு கொரோனாத் தொற்று



இங்கிலாந்துக்குச் சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணியில் ஒரு வீரருக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியிருந்த நிலையில், தற்போது ரிஷப் பண்ட் தான் அந்த வீரர் என்பது தெரிய வந்துள்ளது.

இது தொடர்பாக பி.டி.ஐ. செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள செய்தியில், ரிஷப் பண்டிற்கு நோய் அறிகுறிகள் இல்லாமலேயே கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது. ஒருவாரத்துக்கு முன்பே பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளன எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வெம்ப்ளியில் நடைபெற்ற யூரோக் கிண்ண இறுதிப் போட்டியைப் பார்வையிடச் சென்றிருந்த இந்தியக் கிரிக்கெட் குழுவினரில் ரிஷப் பண்டும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் தற்போதுதனிமைப்படுத்தப்பட்டுள்ளார் என்றும் டர்ஹாமில் உள்ள இந்திய அணியுடன் அடுத்த சில தினங்களுக்குள் இவர் இணைந்து கொள்ள வாய்ப்பில்லை என்றும் தெரிகிறது.

கொரோனாத் தொற்று ஏற்பட்ட இந்தியக் கிரிக்கெட் அணி வீரர் ஒருவர் கடந்த 8 நாள்களாக தனிமையில் இருக்கிறார்என்றும், அணிக்குழுவினர் தங்கியுள்ள ஹோட்டலில் அவர் இருக்கவில்லை என்றும் முன்னதாகச் செய்திகள் வெளிவந்திருந்தன. அந்த வீரரின் பெயரை பொது வெளியில் தெரிவிக்கமாட்டோம்என்று இந்தியக்கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முக்கியஸ்தர் ஒருவர் கூறினார் எனக் கூறப்பட்டது.

இங்கிலாந்தில் பரவி வரும் டெல்டா திரிபு கொரோனா வைரஸ்தான் ரிஷப் பண்டிற்குத் தொற்றியுள்ளதாகவும் தற்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன. இதேவேளை, இன்னுமொரு இந்திய அணி வீரருக்கும் தொற்று ஏற்பட்டதாகவும் அவர் இப்போது குணமடைந்துள்ளார் எனவும் உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலாளரான ஜெய் ஷா, பொதுமக்கள் அதிகம் கூடும் இடங்களை, குறிப்பாக விம்பிள்டன், யூரோ 2020 கால்பந்து தொடர்களுக்குச் செல்வதைத் தவிர்க்குமாறு இந்திய கிரிக்கெட் வீரர்களுக்கு அறிவுறுத்தியிருந்தார் என்றும் ஆனால், பயிற்சியாளர் ரவிசாஸ்திரி முதல் பல வீரர்கள் அது தொடர்பில் அசிரத்தையாக இருந்துள்ளனர் எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

# நான்காவது ரி-20 போட்டியில் ஆஸ்திரேலிய அணி வெற்றி

## நான்கு ஓட்டங்களால்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக விளையாடிய நான்காவது ரி-20 போட்டியில் ஆஸ்திரேலியா 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது.

சென்.லூசியா மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆஸ்திரேலிய அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து, 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 189 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. மிட்செல் மார்ஷ் 75 ஓட்டங்களையும் ஆரோன் பின்ஞ் 53 ஓட்டங்களையும் எடுத்தனர். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ஹெய்டன் வோல்ஷ் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இதனைத்தொடர்ந்து 190 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கிந்தியத் தீவுகள் அணியால், 20 ஓவர்கள்நிறைவில் 6 விக்கெட்டுக்களை இழந்து 185 ஓட்டங்களையே பெற முடிந்தது. இதனால், ஆஸ்திரேலிய அணி 4 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இறுதி ஓவரில் 11 ஓட்டங்கள் பெற வேண்டியிருந்த நிலையில், அன்ட்ரே ரஸல் மற்றும் ஹெய்டன் வோல்ஷ் ஆகியோர் களத்தில் இருக்க, மிட்செல் ஸ்டார்க் சிறப்பாகப் பந்து வீசி 6 ஓட்டங்களை மட்டுமே விட்டுக்கொடுத்தார். மேற்கிந்தியத் தீவுகள் அணியின் லெண்டல் சிமோன்ஸ் 72 ஓட்டங்களையும் எவின் லுயிஸ் 31 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். ஆஸ்திரேலிய அணியின் மிட்செல் மார்ஷ் 3 விக்கெட்டுக்களையும் அடம் சம்பா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 75 ஓட்டங்களைப் பெற்றதோடு 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்திய ஆஸ்திரேலியாவின் மிட்செல் மார்ஷ் தெரிவுசெய்யப்பட்டார். முதல் மூன்று போட்டிகளில் ஆஸ்திரேலிய அணி தோல்வியடைந்து தொடரை இழந்திருந்தாலும் இந்த வெற்றி அவர்களுக்கு ஆறுதல் அளித்துள்ளது. இரு அணிகளுக்குமிடையிலான ஐந்தாவதும் தொடரின் இறுதியுமான ரி-20 போட்டி நாளை நடைபெறவுள்ளது.






# சிம்பாப்வே அணிக்கெதிரான கிரிக்கெட் தொடர் பங்களாதேஷ் வீரர் முஷ்பிகுர் ரஹிம் விலகல்

பங்களாதேஷ் கிரிக்கெட் அணி, சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. இவ்விரு அணிகளுக்கிடையே ஹராரேயில் நடந்த ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் பங்களாதேஷ் அணி 220 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையே தலா மூன்று ஒருநாள் மற்றும் ரி-20 போட்டிகள் நடைபெறவுள்ளன.

முதலாவது ஒருநாள் போட்டி நாளை நடைபெறவிருக்கும் நிலையில் பங்களாதேஷ் அணியின் விக்கெட் காப்பாளரும் துடுப்பாட்ட வீரருமான முஷ்பிகுர் ரஹிம் திடீரென தொடரிலிருந்து விலகி நேற்று டாக்கா திரும்பினார். அவர் தனிப்பட்ட குடும்ப விவகாரம் காரணமாக இந்த முடிவை எடுத்திருக்கிறார் என பங்களாதேஷ் கிரிக்கெட் சபையின் சார்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மோசடிக்காரர் நாட்டின் நிதி அமைச்சர் பஸிலிடம் சரமாரியாக இளைஞர் கேள்வி

கொழும்பு, ஜூலை, 15

'உங்களிடம் நான் கேட்கின்றேன், நீங்கள் வந்ததிலிருந்து இதுவரை என்ன செய்தீர்கள்' என பஸிலிடம் இளைஞர் ஒருவர் சரமாரியாகக் கேள்வி எழுப்பியுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தின் நடவடிக்கையில் கோபமடைந்த இளைஞன் ஒருவர் சமூக வலைத்தளத்தில் மேற்கூறியவாறு தெரிவித்து காணொலி ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

நான் நேரடியாகவே சொல்கின்றேன். உங்களுக்கு எம்மத்தியில் எந்தவொரு கௌரவமும் இல்லை, ஆகவே இந்த கொடிகளைக் கட்டியது, இந்த வரவேற்பு ஏற்பாடுகள் எல்லாம் ஒழுங்கு செய்தது இந்த நாட்டில் உள்ள அனைத்து மக்களும் என நீங்கள் நினைத்துவிட வேண்டாம்.

எமக்கு தெரிந்தளவில் சுனாமியிலிருந்து நிறைய விடயங்களை மிகவும் நுணுக்கமான முறையில் கொள்ளையடித்த அமெரிக்க பிரஜாவுரிமை உடைய அமெரிக்கர் தான் நீங்கள். நிறைய விடயங்களைச் சகித்துக் கொண்டுதான் பேசுகின்றேன்.

எமது நாட்டில் காடழிப்பு இடம்பெற்றபோது நாம் பொறுமையாக இருந்தோம். எமது நாட்டில் வளங்கள் காணாமல் போனபோது நாம் பொறுமையாக இருந்தோம். எமது வரலாற்றில் எமக்கான நிறைய விடயங்கள் அழிக்கப்பட்ட போது நாம் பொறுமையாக இருந்தோம்.

எமக்கு ஏதாவது செய்வாரென்றுதான் நாங்கள் கோட்டாபயவிற்கு வாக்குகளை வழங்கினோம். நாங்கள் அதைத்தான் எதிர்பார்த்தோம். ஆனால் நீங்கள் முழுக்குடும்பமாக சேர்ந்து இந்த நாட்டை நாசம் செய்து விட்டீர்கள்.

இந்த நாட்டில் மாணவர்களின் கல்விக்காக இதுவரை நீங்கள் எதனையும் செய்யவில்லை. பஸில், உங்களிடம் நான் கேட்கின்றேன் நீங்கள் வந்ததிலிருந்து இதுவரை என்ன செய்தீர்கள்? எங்களுக்காக நீங்கள் எதையுமே செய்ததில்லை. மிகவும் வேதனையுடனேயே பேசுகின்றேன்.

நீங்கள் பாதையில் செல்லும் போது உங்கள் வாகனங்களை நிறுத்தி உங்களைக் கீழே இறக்கி உங்கள் ஆடைகளைக் கிழித்து ஓட ஓட விரட்டி அடிக்கும் நாள்கள் வெகு தொலைவில் இல்லை. கள்ளன் என அழைக்கப்படும், மோசடிக்காரர் என அழைக்கப்படும் ஒருவரை நிதியமைச்சராக்கியதாலேயே நாங்கள் இவ்வளவு கோபமடைந்துள்ளோம்.

நான் பேசுவது எம் அனைவரினதும் பிள்ளைகளுக்காக. ஆகவே என்னைக் கடத்திச்சென்று, அடித்து, என்னைச் சுட்டாலும் எனக்குப் பயமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு மாவட்டத்துக்கு 10கோடி ரூபா நிதி ஒதுக்கம்

## வியாழேந்திரன் தெரிவிப்பு



இஞ்சி, உழுந்து, பயறு, மஞ்சள் போன்ற உற்பத்திப் பொருள்களையும் அந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான விவசாய உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக மேலும் 10கோடி ரூபா மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு சிறுபொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் அரசினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் ஆடு வளர்ப்புத் திட்டம் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் பின்தங்கிய கிராமிய அபிவிருத்தி மற்றும் மனைசார் கால்நடை வளர்ப்பு சிறு பொருளாதார மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தலைமையில் இன்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மாவட்ட அரசாங்க அதிபர் கே. கருணாகரனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் அமைச்சின் செயலாளர் வைத்தியர் அமலஸ்ரீ சில்வா, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சசிகலா புண்ணியமூர்த்தி, மாவட்ட செயலக பிரதம கணக்காளர் கே. ஜெகதீஸ்வரன், மாவட்டத்தின் பிரதேச செயலளர்கள், விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி திணைக்கள உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது இந்த அமைச்சால் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமுல்படுத்தப்பட்ட ஆடு வளர்ப்புத் திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இந்த ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. இதன்போது இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் கருத்து தெரிவிக்கையில் –

இந்த ஆண்டு மட்டக்களப்பு மாவட்டத்தில் இஞ்சி, உழுந்து, பயறு போன்ற சிறு பொருளாதார பயிர்ச் செய்கைக்கான தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு உதவிகள் வழங்குதல், ஆடு வளர்ப்புத் திட்டம் மற்றும் சேதனப் பசளை உற்பத்திக்கான உபகரணங்களை வழங்கல் போன்ற திட்டங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இது தவிர இஞ்சி, உழுந்து, பயறு, மஞ்சள் போன்ற உற்பத்திப் பொருள்களையும் அந்த உற்பத்திகளை மேற்கொள்வதற்கான விவசாய உபகரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக மேலும் 10 கோடி ரூபா இந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# போதைப்பொருள் சுற்றிவளைப்புக்களில் நாடளாவிய ரீதியில் அறுவர் கைதாகினர்

கொழும்பு, ஜூலை 15

நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட போதைப்பொருள் சுற்றிவளைப்புகளில் ஹெரோய்னுடன் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் றோஹண தெரிவித்துள்ளார்.

பொலன்னறுவை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மன்னம்பிட்டிய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது 57 கிராம் 08 மில்லிகிராம் ஹெரோயினுடனும், 14 கிராம் 654 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடனும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹீனுப்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயது நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, மிஹிஜய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உயண பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையின்போது 6 கிராம் 300 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். முகத்துவாரம் பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார். பொரளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காதார்னான தோட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில் 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொரளைப் பிரதேசத்தைச் சேர்ந்த 50 வயது நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

மீகொட சிறிமெதுர தோட்டப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் 5 கிராம் 530 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எகொட உயன பொலிஸ் பிரிவில் 5 கிராம் ஹெரோய்னைத் தன்வசம் வைத்திருந்தக் குற்றச்சாட்டில் 22 வயது நபர் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த நபரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

எகொட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சாம மாவத்தையில் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் 4 கிராம் 80 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார். மொரட்டுவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 19 வயது இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட அனைவரையும் நீதி மன்றில் ஆஜர்படுத்துவதற்கு பொலி ஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# வைத்தியர் ஹேமந்த ஹேரத் தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்

*சுகாதார அமைச்சின் ஊடக பேச்சாளரும் பிரதி சுகாதார சேவை பணிப்பாளருமான விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.*

*சுகாதார அமைச்யில் பணி புரியும் அலுவலக ஊழியர்கள் சிலருக்கு கொவிட் தொற்று உறுதிப்படுத்தப்பட்டமையைத் தொடர்ந்து அவர் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளார்.*

# கொரோனாத் தடுப்பூசி விடயத்தில் கூட்டமைப்பு தடுமாற்றப் பேச்சு

## நாடாளுமன்ற உறுப்பினர் திலீபன் குற்றச்சாட்டு

தடுப்பூசி விடயத்தில் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வவுனியாவில் ஒன்றும் மன்னாரில் வேறொன்றும் என தடுமாற்றப் பேச்சு பேசுகிறார் என நாடாளுமன்ற உறுப்பினர் கு. திலீபன் தெரிவித்தார்.

வவுனியா - தாண்டிக்குளம் பகுதியில் நேற்று (புதன் கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் -

அரசாங்கத்தின் திட்டங்கள் வவுனியாவில் சிறந்த முறையில் செயற்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு இங்கிருக்கும் அதிகாரிகளே காரணம். அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அரசின் சௌபாக்கியா திட்டத்தின் மூலம் முன்னெடுக்கப்படும் செயற்திட்டங்கள் முறையாக இடம்பெறவில்லையாயின் பிரதேச செயலாளரையோ என்னையோ தொடர்புகொண்டு முறையிட முடியும். அதற்கான நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

பத்து வருடங்களுக்கு மேலாக நீங்கள் பயன்படுத்துகின்ற காணிகளில் வன திணைக்களத்தினரால் எல்லை போடப்பட்டிருந்தால் அல்லது காணியை விட்டு வெளியேறுமாறு தெரிவித்திருந்தாலோ நீங்கள் எங்களை தொடர்பு கொள்ள முடியும். அவ்வாறான காணிகளை உங்களுக்கே பெற்றுத்தருவதற்கு அமைச்சர் டக்ளஸ் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறார்.அதற்கான பலன்கள் கிடைத்துள்ளன.

இதேவேளை பஸில் ராஜபக்ஷவின் வருகையால் நாட்டின் பொருளாதாரம் மாற்றமடையும். என்பது நிச்சயம். அவ்வாறான மாற்றத்தை விரைவில் நீங்கள் காணலாம்.

வவுனியா மக்களுக்;கான தடுப்பூசி விடயம் தொடர்பாக இராஜாங்க அமைச்சருடன் பேச்சு முன்னெடுத்திருக்கின்றேன். கிடைக்கின்ற தடுப்பூசிகளை சந்தோசமாக பெற்றுக்கொள்ளாமல். அதில் உள்ள குறைகளையே அனைவரும் பேசுகின்றனர்.

உடனடியாகத் தடுப்பூசி கிடைக்காமையால் கடந்த வாரம் ஆயிரம் தடுப்பூசிகளை இராணுவத்தின் மூலம் பெற்றிருந்தோம். வன்னியைச் சேர்ந்த தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் மன்னார் மாவட்டத்தில் பேசுகிறார்.

அரசாங்கத்துடன் பேசி மன்னார் மாவட்டத்துக்குத் தடுப்பூசிகளை பெற்றுகொடுத்திருக்கிறோம் என்று. ஆனால் அதே நாடாளுமன்ற உறுப்பினர் வவுனியாவில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் கூறுகிறார். தடுப்பூசி விடயத்தில் வவுனியாவை அரசாங்கம் புறக்கணித்துள்ளது என்று இவை எல்லாம் அரசியல் சுயஇலாபத்திற்காக பேசக்கூடிய விடயம். - என்றார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 15.07.2021இல் வெளியிடப்பெற்றது.